**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>செய்தி வெளியீடு எண்:</u>** **<u>நாள்: 04.12.2023</u>**

**சென்னை நகர் முழுவதுக்கும் மின்னோட்டம் தரும் 1,794 மின்பாதைகளில் 694 மின்பாதைகளில் மட்டும் மின்சாரம் பாதுகாப்பு கருதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்காக போர்கால அடிப்படையில் மின்சாரம் வழங்க 5,527 மின்வாரிய களப்பணியாளர்களும் மற்றும் 1,176 ஒப்பந்த தொழிலாளர்களும் பணியாற்றி வருகின்றனர் – மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் – தகவல்**

சென்னை நகர் முழுவதுக்கும் மின்னோட்டம் தரும் 1,794 மின்பாதைகளில் மாலை 5 மணி நிலவரப்படி 694 மின்பாதைகளில் மட்டும் மின்சாரம் பாதுகாப்பு கருதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்காக போர்கால அடிப்படையில் மின்சாரம் வழங்க 5,527 மின்வாரிய களப்பணியாளர்களும் மற்றும் 1,176 ஒப்பந்த தொழிலாளர்களும் பணியாற்றி வருதாக மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் தெரிவித்துள்ளார். இன்று (04.12.2023) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் மாநில மின் பகிர்ந்தளிப்பு மையம் (State Load Despatch Centre) மற்றும் சென்னை மின் பகிர்மான கட்டுப்பாட்டு மையம் (Chennai Distribution Control Centre) ஆகியவற்றில் மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., மேலாண்மை இயக்குநர் (மின் தொடரமைப்பு கழகம்) திரு. மா.இராமசந்திரன், இயக்குனர் (பகிர்மானம்), திரு.இரா.மணிவண்ணன் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பின்னர், மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியதாவது:

கடந்த எட்டு வருடங்கள் இல்லாத அளவிற்கு சென்னையில் தற்போது சராசரியாக 28.4 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகி உள்ளது. இதன் காரணமாக சாலைகளில் மழை வெள்ளம் அதிகமாக பெருக்கேடுத்து ஓடுகிறது. இருப்பினும் மின்பாதைகளிலும், பில்லர் பெட்டிகளிலும் பழுதுகள் ஏதும் ஏற்படவில்லை, சாலைகளிலும், தெருக்களிலும் இடுப்பளவுக்கு மேல் மழை வெள்ளம் சூழ்ந்துள்ளதால், பொதுமக்களின் பாதுகாப்பு கருதி தற்காலிகமாக மின்சாரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இதுவரை புயலின் தாக்கம் குறையவில்லை என்பதால் அனைத்து பகுதிகளிலும் மின்சாரம் முழுமையாக வழங்க இயலவில்லை. புயல் மற்றும் மழையின் தாக்கம் குறைந்த உடன் இரண்டு மணி நேரத்திற்குள் தண்ணீர் வடிந்த பகுதிகளில் மின்சாரம் வழங்கப்படும்.

சென்னை நகர் முழுவதுக்கும் மின்னோட்டம் தரும் 1,794 மின்பாதைகளில் மாலை 5 மணி நிலவரப்படி 694 மின்பாதைகளில் மட்டும் மின்சாரம் பாதுகாப்பு கருதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்காக போர்கால அடிப்படையில் மின்சாரம் வழங்க 5,527 மின்வாரிய களப்பணியாளர்களும் மற்றும் 1,176 ஒப்பந்த தொழிலாளர்களும் பணியாற்றி வருகின்றனர்.

மின்வாரிய தலைமை அலுவலகத்தில் 24x7 செயல்பட்டு வரும் மின்னகம் மின் நுகர்வோர் குறைதீர்ப்பு மையத்தின் மூலம் நேற்றைய தினம் 3,315 புகார்கள் பெறப்பட்டு, 3,154 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டது. இன்றையதினம் மாலை 6 மணி வரை பெறப்பட்ட சுமார் 1,897 புகார்களில், இதுவரை 850 புகார்களுக்கு தீர்வு காணப்பட்டது.

சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் மிக்ஜாம் புயலின் காரணமாக ஏற்பட்ட 400 மற்றும் 230 கி.வோ. துணைமின் நிலையங்கள் மற்றும் மின் பாதைகளில் ஏற்பட்ட பழுதுகள் மற்றும் பழுது நீக்கம் செய்யப்பட்ட விவரங்கள் பின்வருமாறு:

400 கி.வோ. துணைமின் நிலையங்களைப் பொறுத்தமட்டில் ஒன்றில் மட்டுமே பழுது ஏற்பட்டு, பழுது நீக்கப்பட்டு மின்னோட்டம் வழங்கப்பட்டது. 400 கி.வோ. மிகை உயர் மின் அழுத்த பாதைகளில் மூன்றில் பழுது ஏற்பட்டு சரி செய்யப்பட்டு விட்டது.

230 கி.வோ. துணைமின் நிலையங்களைப் பொறுத்தமட்டில் 30 துணைமின் நிலையங்களுக்கு மின்னோட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. 230 கி.வோ. கிட்ஸ் பார்க் துணை மின்நிலையத்தில் அதிகளவு தண்ணீர் புகுந்ததால் தற்காலிகமாக மின்சாரம்

நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 230 கி.வோ. மிகை உயர் அழுத்த மின்பாதைகளில் பொருத்த வரை 19 மின் பாதைகளில் பழுது ஏற்பட்டு 6 மின் பாதைகளில் பழுதுகள் நீக்கப்பட்டு மின்னோட்டம் வழங்கப்பட்டது. மீதமுள்ள 13 மிகை உயர் மின் அழுத்த பாதைகளில் பழுது நீக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

110 கி.வோ. துணைமின் நிலையங்களைப் பொறுத்தமட்டில் 112 துணைமின் நிலையங்களுக்கு மின்னோட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. 10 துணை மின் நிலையங்களில் அதிகளவு தண்ணீர் புகுந்ததால் பாதுகாப்பு கருதி தற்காலிகமாக மின்சாரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. 110 கி.வோ. மிகை உயர் அழுத்த மின்பாதைகளைப் பொருத்த வரை 27 மின் பாதைகளில் பழுது ஏற்பட்டு 13 மின் பாதைகளில் பழுதுகள் நீக்கப்பட்டு மின்னோட்டம் வழங்கப்பட்டது. மீதமுள்ள 14 மிகை உயர் மின் அழுத்த பாதைகளில் பழுது நீக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மிகை உயர்மின் அழுத்த பாதை பழுது நீக்கும் பணியில் 16 குழுக்களாக 450 பணியாளர்கள், 6 மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் 18 செயற் பொறியாளர்கள் தலைமையில் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், கடுமையான சூறாவளி காற்றிலும், பலத்த மழையாலும் பணியாளர்கள் மிகுந்த சிரமத்திற்கு இடையே பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். மதுரை, கோயம்பத்தூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களிலிருந்து பழுது நீக்கும் பணியினை மேற்கொள்ள 120 பணியாளர்கள் சென்னை வந்துள்ளார்கள்.

இந்த நேரத்தில் பொதுமக்களுக்கு நான் கேட்டுக்கொள்வதாவது, மழையின் அளவு குறைய, குறைய மின் விநியோகம் படிப்படியாக வழங்கப்படும், மின் இணைப்பு வழங்கியவுடன் பொதுமக்கள் மின் மோட்டாரினை இயக்கி தேவையான அளவிற்கு தண்ணீரை இருப்பு வைத்துக்கொள்ளுமாறும், தங்கள் வீட்டில் பயன்படுத்தும் குளிர்சாதனப் பெட்டி, அலைபேசி மற்றும் தொலைதொடர்பு சாதனங்களுக்கு தேவையான அளவு மின்னேற்ற வசதியினை பூர்த்தி செய்துகொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு, மாண்புமிகு நிதி, மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்